சின்ன சின்னதாய்

கே.எம்.சி.ஹெச்-ல் ரோபோடிக் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை முகாம்

■ கோவை

கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரோபோடிக் மூட்டு மாற்று கருவியை அறிமுகம் செய்து 750–க்கும் மேலான மிகத்துல்லியமான அறுவை சிகிச்சைகள் செய்துள்ளது. மேலும் மென்மையான திசுக்களைப் பாதுகாத்து நோயாளி விரைவில் குணமடையவும் உதவிகரமாக உள்ளது.

செயற்கை நுண்ணறிவு துணையுடன் இயங்கும் இந்த கருவி அறுவை சிகிச்சையை சுலபமாகவும் விரைவாகவும் செய்து முடிக்க உதவுகிறது. மேம்பட்ட துல்லியம், எலும்புகள் மீது மிகவும் கச்சிதமாக இம்பிளாண்டுகள் பொருத்துதல், நோயாளியின் மூட்டு அமைப்புக்கு ஏற்றவாறு பிரத்யேக சிகிச்சை, அறுவை சிகிச்சைக்குப் பின்னர் மிக குறைவான வலி மற்றும் வீக்கம் ஆகியவை இந்த ரோபோட்டிக் தொழில்நுட்பத்தினால் கிடைக்கும் முக்கிய பலன்களாகும். நோயாளி விரைவில் குணமடைவதால் மருத்துவமனையில் தங்கும் காலம் குறைவாகும். இந்த அதிநவீன இயந்திரங்கள் அளிக்கும் அனுகூலங்களை நோயாளிகள் எளிதில் பெற்று பலனடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் கேஎம்சிஹெச் மருத்துவமனை ரோபோடிக் மூட்டு மாற்று முகாமிற்கு ஏற்பாடு செய்துள்ளது. கடந்த மார்ச் 1–ம் தேதி தொடங்கிய முகாம் வரும் ஏப்ரல் 30 வரை கேஎம்சிஹெச் மருத்துவமனையில் நடைபெறும். இதில் ரோபோட்டிக் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை 20 சதவீத சலுகைக் கட்டணத்தில் அளிக்கப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு 7418887411 என்ற செல்போனில் தொடர்பு கொள்ளலாம்.

➤ கோவை மலபார் கோல்டு அண்ட் டைமண்ட்ஸ் கிளைகள் சார்பில் ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி கலையரங்கத்தில் நடந்த அரசு பள்ளி மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் விழாவில் பங்கேற்றோர்.

மலபார் கோல்டு அண்ட் டைமண்ட்ஸ் சார்பில் ரூ.41,32,000 கல்வி உதவித்தொகை வழங்கல்

■ கோவை

கோவை மலபார் கோல்டு அண்ட் டைமண்ட்ஸ் கிளைகளின் சார்பில் அரசு பள்ளி மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது.

மலபார் கோல்டு அண்ட் டைமண்ட்ஸ் நிறுவனம் சார்பில் பெருநிறுவனங்கள் சமூக பொறுப்பு திட்டத்தின்கீழ், அரசு பள்ளி மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கான விழா, கோவை 100 அடி சாலை மற்றும் ஒப்பணக்கார வீதி மலபார் கோல்டு அண்ட் டைமண்ட்ஸ் கிளைகள் சார்பில் ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி கலையரங்கத்தில் நடந்தது. கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார், மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், மேயர் ரங்கநாயகி, சிபிஎம் கல்லூரி முதல்வர் சிங்காரவேலு, தொழிலாளர்துறை, உதவி ஆணையர் காயத்திரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 65 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளை சேர்ந்த 534 மாணவிகளுக்கு மொத்தம் ரூ.41,32,000 மதிப்பிலான காசோலை வழங்கப்பட்டது. மலபார் கோல்டு அண்ட் டைமண்ட்ஸ் தமிழ்நாடு மேற்கு மண்டல தலைவர் நௌசாத், கோவை 100 அடி சாலை கிளை இணை தலைவர் பாஹிம், கோவை ஒப்பணக்கார வீதி கிளை தலைவர் மார்ட்டின் பாபு, கோவை ஆர்.எஸ்.புரம் கிளை இணை தலைவர் அனீஸ் ரஹ்மான், கோவை 100 அடி சாலை கிளை வர்த்தக மேலாளர் தேவராஜ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

சர்க்கார்பதி மின் உற்பத்தி நிலையத்தில் பழுதுபார்ப்பு பணி நிறைவு

காண்டூர் கால்வாயில் விநாடிக்கு 1100 கன அடி தண்ணீர் திறப்பு

■ பொள்ளாச்சி

சர்க்கார்பதி மின் உற்பத்தி நிலையத்தில் பழுது பார்க்கும் பணிகள் நிறைவடைந்ததால், காண்டூர் கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

பரம்பிக்குளம் - ஆழியாறு பாசனத் திட்டத்திலுள்ள பரம்பிக்குளம் அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீர், தூணக்கடவு அணையை சென்றடைகிறது. பின்னர் அங்கிருந்து சுரங்கப் பாதை வழியாக சர்க்கார்பதி மின்நிலையம் கொண்டு செல்லப்பட்டு, மின் உற்பத்திக்கு பின்னர் வெளியேற்றப்படும் தண்ணீர் காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு சென்றடைகிறது.

தற்போது, பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டத்திலுள்ள திருமூர்த்தி அணையில் இருந்து மூன்றாம் மண்டல பாசனத்தில் முதல் சுற்று முடிவடைந்த நிலையில், இரண்டாம் சுற்றுக்கு வழங்க தண்ணீர் தேக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், திடீரென சர்க்கார்பதி மின் உற்பத்தி நிலையத்திலுள்ள டர்பன் (ஜெனரேட்டர்) பழுதடைந்தது. இதனால், மின் உற்பத்திக்கு பிறகு காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் கொண்டு செல்வது நிறுத்தப்பட்டது. மின் உற்பத்தி நிலையத்தில் பல ஆண்டுகளாக இயங்கி வந்த மின் உற்பத்தி கட்டமைப்பு பழுதுகளை சரி செய்யும் பணி தொடங்கியது. நீர் வளத்துறை அதிகாரிகள், பாசன திட்ட குழு தலைவர்கள், மின்வாரிய அதிகாரிகள் பணிகளை விரைந்து முடித்து, காண்டூர் கால்வாய் வழியாக தண்ணீர் திறக்க வலியுறுத்தினர்.

இதுகுறித்து நீர்வளத்துறை அதிகாரிகள் கூறும்போது, "சர்க்கார்பதி நீர் மின் உற்பத்தி நிலையத்தில் பழுது பார்ப்பு பணிகள் முடிவடைந்து, நேற்று முன்தினம் மாலை காண்டூர் கால்வாய் வழியாக விநாடிக்கு 1100 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால், திருமூர்த்தி அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கும். அணையின் நீர்மட்டம் 50 அடியாக உயர்ந்ததும், வரும் 14-ம் தேதி முதல் இரண்டாம் சுற்றுக்கு தண்ணீர் திறக்க வாய்ப்புள்ளது" என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

● சர்க்கார்பதி மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு, காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு செல்லும் தண்ணீர்.

வால்பாறை அருகே காட்டு மாடு தாக்கி தொழிலாளி உயிரிழப்பு

■ வால்பாறை

வால்பாறை அருகே கேரளா மாநிலம் மளுக்குபாறை எஸ்டேட்டில் ஜார்க்கண்ட் மாநிலத்தை சேர்ந்த சஞ்சய் (24) என்பவர் பணி புரிந்து வந்தார். கடந்த 2-ம் தேதி இரவு 7 மணியளவில், அங்குள்ள கடையில் பொருட்களை வாங்கிவிட்டு வீட்டுக்கு சென்று கொண்டிருந்தார்.

எதிர்பாராதவிதமாக எதிரே வந்த காட்டு மாடு தாக்கியதில் படுகாயமடைந்தார். இதையடுத்து, வால்பாறை அரசு மருத்துவமனையில் முதலுதவி அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். இந்நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார். இதுகுறித்து மளுக்குபாறை வனத்துறையினர் விசாரித்து வருகின்றனர்.

உதகையில் சொத்து வரி செலுத்தாத தனியார் தங்கும் விடுதிக்கு 'சீல்'

■ உதகை

உதகை நகராட்சியில் சொத்து வரி செலுத்தாத தனியார் தங்கும் விடுதிக்கு 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டம் உதகை நகராட்சியிலுள்ள 36 வார்டுகளில் 1,27,540 பேர் வசித்து வருகின்றனர். இங்கு 30,090 சொத்துவரிதாரர்களும், 4,124 தொழில் வரிதாரர்களும், 14,773 குடிநீர் வரி இணைப்புதாரர்களும் உள்ளனர்.

இதேபோல், வரியில்லா இனங்களாக 2,456 கணக்குகள் உள்ளன. இதில் சொத்துவரி, தொழில் வரி ஆண்டுக்கு 2 முறையும், குடிநீர் வரி 3 மாதங்களுக்கு ஒரு முறையும் செலுத்த வேண்டும். 2024-25-ம் நிதியாண்டு வரையிலான காலத்தில் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி உட்பட பல்வேறு வரியினங்கள் மூலமாக, ரூ.58 கோடி வசூல் ஆக வேண்டியுள்ளது. இதுமட்டுமின்றி நிலுவை வரியும் தனியாக உள்ளது.

இதைத்தொடர்ந்து, கடந்த சில நாட்களாக வரி வசூலிக்கும் பணியில் நகராட்சி நிர்வாகம் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. பல்வேறு துறைகளை சேர்ந்த ஊழியர்கள் இந்த பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதேபோல் வரி செலுத்தாதவர்களுக்கு 'சீல்' வைக்கும் நடவடிக்கைகளை நகராட்சி நிர்வாகம் தொடங்கியுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு ரூ.32 லட்சம் வரி பாக்கி வைத்த பொதுத்துறை வங்கி உட்பட 6 கடைகளுக்கு 'சீல்' வைக்கப்பட்டது. அதேபோல், வரி செலுத்தாத மேலும் ஒரு சில கடைகளுக்கு 'சீல்' வைக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், கடை நடத்தும் உரிமம் பெறாமலும், சொத்து வரி உள்ளிட்ட நிலுவைத்தொகை ரூ.27 லட்சம் செலுத்தாததாலும் தனியார் தங்கு விடுதிக்கு 'சீல்' வைக்கப்பட்டது.

நகரில் நடப்பவை

கோவை

- ரிதமிக் பேலட் தொடர் 2024-25 தொடரின் ஓவியக் கண்காட்சி: கஸ்தூரி சீனிவாசன் கலை மையம், அவிநாசி சாலை, கோவை, காலை 10 மணி.
- திறன் மேம்பாட்டுத் திட்டம் குறித்த கருத்தரங்கு : ஜி.ராமசாமி ஆடிட்டோரியம், சுகுணா பொறியியல் கல்லூரி, காளப்பட்டி சாலை, கோவை, மதியம் 1.30 மணி.
- கொங்கு ரத்தினங்கள் மற்றும் கொங்கு மாமணிகள் நூல்கள் வெளியீட்டு விழா : இந்திய தொழில் வர்த்தக சபை அரங்கம், கோவை. மாலை 6 மணி.

அணைகளின் நீர்மட்டம்

சோலையாறு அணை (165 அடி)
நீர்மட்டம்: 1.98 அடி
நீர்வரத்து: 9.96 கனஅடி
வெளியேற்றம்: 9.96 கனஅடி

பரம்பிக்குளம் அணை (72 அடி)
நீர்மட்டம்: 62.15 அடி
நீர்வரத்து: 72 கனஅடி
வெளியேற்றம்: 907 கனஅடி

ஆழியாறு அணை (120 அடி)
நீர்மட்டம் : 76.40 அடி
நீர்வரத்து: 295 கனஅடி
வெளியேற்றம்: 572 கனஅடி

திருமூர்த்தி அணை (60 அடி)
நீர்மட்டம்: 40.23 அடி
நீர்வரத்து: 284 கனஅடி
வெளியேற்றம்: 60 கனஅடி

அமராவதி அணை (90 அடி)
நீர்மட்டம் - 55.42 அடி
நீர்வரத்து - 169 கனஅடி
வெளியேற்றம்- 522 கனஅடி

இந்து தமிழ் திசை
பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.
படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

TNPL தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்
காகிதபுரம் – 639 136. கரூர் மாவட்டம், தமிழ்நாடு.
தொலைபேசி : 04324 – 277001 (10 இணைப்புகள்).
இமெயில் : tech_services@tnpl.co.in

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி எண்.	பணியின் விவரம்	கடைசி நாள்
242513 006848	2025-26ம் வருடத்திற்கு, TNPL அலகு-I காகிதபுரத்தில் உள்ள தொழிற்துறை உணவகத்தை இயக்கி உணவு வகைகளை தயாரித்தல் மற்றும் தொழிலாளர்களுக்கு வழங்குதல்.	21.03.2025

பிழை திருத்தங்கள் இருப்பின் அவை TNPL மற்றும் NIC இணையதளங்களில் மட்டுமே வெளியிடப்படும். விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், ஒப்பந்தப்புள்ளி கட்டணம் மற்றும் பிணை வைப்புத்தொகை ஆகியவற்றை www.tnpl.com / https://tntenders.gov.in/nicgep/app என்ற இணையதளங்களில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
செ.ம.தொ.இ/900/ஒப்பந்தப்புள்ளி/2025 நாட்டின் இயற்கைவளம் போற்றும் காகிதம் செய்வோம்

TAMIL NADU CIVIL SUPPLIES CORPORATION, REGIONAL OFFICE, ERODE REGION.
E-TENDER NOTICE
e-Tender No.2519/2023/BS3 Dated:06.03.2025
Tamil Nadu Civil Supplies Corporation invites online electronic tenders for "The sale of various categories of old used gunnies available in TNCSC godowns Located in Erode Region
Complete e-tender document can be viewed, downloaded and uploaded through:https://tntenders.gov.in
From 08.03.2025 To 25.03.2025.
The bidders have to participate in online bidding only with Digital Signature Certificate (DSC) of Class-III.
Last Date for Online Submission : 25.03.2025 up to 11.00 AM
Tender Opening Date & Time : 26.03.2025 at 11.30 AM
DIPR/926/TENDER/2025

டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 11வது தளம், டவர் ஏ, பெனிஸுலா பிசினஸ் பார்க், கணபத்ராவ், கடம் மார்க், லோவர் பெரல், மும்பை-400013.
CIN No. U67190MH2008PLC187552. Contact No. (022) 61827414, (022) 61827375

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்திற்காக)
(பாதுகாப்பு வட்டி அமலாக்கம் விதிகள், 2002-ன் விதி 8(1)-ன்கீழ்)

கீழே கையொப்பமிட்டுள்ள டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கம் பாதுகாப்பு வட்டி சட்டம், 2002 மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002-ன் விதி 3-ன்படி பிரிவு 13(12)-ன்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி, கீழ்குறிப்பிட்டுள்ள கோரிக்கை அறிவிப்பு நாள் அன்று கீழ்குறிப்பிட்டுள்ள கடன்தாரருக்கு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள கீழ்குறிப்பிட்டுள்ள நிலுவை தொகை மற்றும் அத்துடன் வட்டி, வருங்கால வட்டி, கட்டணங்கள், செலவுகள், இதர சேர்த்து அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார்.
கடன்தாரர் தொகை செலுத்த தவறிவிட்டபடியால் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர் குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது மேற்படி சட்டம் பிரிவு 13 அதன் பிரிவு (4)-ன்கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை விதி 8-ல் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை கீழ்குறிப்பிட்டுள்ள தேதியன்று சுவாதீனம் செய்துள்ளார்.
மேற்குறிப்பிட்ட கடன்தார்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் சுவாதீனமான அடமான சொத்துக்கள் விஷயத்தில் எவரும் எவ்வித பேரமும் வைத்துக் கொள்ளக்கூடாது. மீறி வைத்துக்கொண்டால் அது டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்-க்கு செலுத்தப்பட வேண்டிய கீழ்குறிப்பிட்டுள்ள பாக்கித் தொகை அத்துடன் வட்டி, கட்டணங்கள், செலவுகள், இதர உட்பட செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.
(கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்டம் 13-ன் பிரிவு (8) ஷரத்துக்களின்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது)

வ. எண்.	கடன் கணக்கு எண்கள்	கடமைபட்டவர்(கள்)/ சட்டப் பிரதிநிதிகள்/ சட்ட வாரிசு(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பு தொகை மற்றும் நாள்	சிம்பொலிக் சுவாதீனம் நாள்
1.	TCHHL0877000100188201 &TCHHF0877000100194665 &TCHIN0877000100194850	திரு. சண்முகம் B, கடன்தாரர் மற்றும் திருமதி. ஹேமலதா S இணை-கடன்தாரர்கள்	ரூ.14,58,456 /- (ரூபாய் பதிநான்கு இலட்சத்து ஐம்பத்தி எட்டாயிரத்து நானூற்றி ஐம்பத்தி ஆறு மட்டும்) & 05.11.2024	05.03.2025 சிம்பொலிக்

பாதுகாப்பு சொத்துக்கள்/அசையா சொத்துக்கள் விவரம்: சொத்து மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், திருப்பூர் பதிவு மாவட்டம், சார் பதிவு மாவட்டம், உடுமலைபேட் தாலுகா, உடுமலைபேட் நகராட்சி, கனக்கம்பாளையம் கிராமம், பட்டா எண். 61, எஸ்.எப்.எண். 83, 12.81 ஏக்கர், இதன் தெற்கு பக்கம் கிழக்கு-மேற்கு ஏக்கர் 1.40 எஸ்.எப்.எண். 86 புதிய துணை-பிரிவு பட்டா எண். 61 எஸ்.எப்.எண். 86/1 ஏக்கர் 0.55 எஸ்.எப்.எண். 87 துணை பிரிவு பட்டா எண். 12 எஸ்.எப்.எண். 87/1, ஏக்கர் 0.38. இதன் இணைந்த நிலம் 2.33 ஏக்கர் "ஸ்ரீ சக்தி பகவதி நகர்" என்ற பெயரில் லேஅவுட்டாக மாற்றப்பட்டது, இதில் சைட் எண்.30 மற்றும் பரப்பு 2400 சதுர அடி மற்றும் மேற்கூறப்பட்ட சொத்தில் இணைக்கப்பட்ட அனைத்து மற்ற பாகங்கள், எஸ்.எப்.எண். 86/1ஏ, புதிய எஸ்.எப். 86/1ஏ1ஏ1ஏ-க்குப்பட்டது. எல்லைகள் : வடக்கில் : 25 அடி கிழக்கு-மேற்கு லேஅவுட் சாலை, தெற்கில் : சுஜன் லேஅவுட்கள், கிழக்கில் : சைட் எண்.31, மேற்கில் : சைட் எண்.29. அளவுகள் : கிழக்கிலிருந்து மேற்கு 40 வடக்காக, கிழக்கிலிருந்து மேற்கு 40 தெற்காக, வடக்கிலிருந்து தெற்கு 60 கிழக்காக, வடக்கிலிருந்து தெற்கு 60 மேற்காக. பரப்பளவு 2400 சதுர அடி மற்றும் சாலைகள் உபயோக வழக்கமான பாதை உரிமைகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட மற்ற அனைத்து பகுதிகள்.

| 2. | TCHHL0479000100159399 & TCHIN0479000100163794 | திரு. மணிகண்டன் ராஜப்பன், கடன்தாரர் மற்றும் திருமதி. சகுந்தலா மணிகண்டன் (இணை-கடன்தாரர்கள்) | ரூ.28,48,275 /- (ரூபாய் இருபத்தி எட்டு இலட்சத்து நாற்பத்தி எட்டாயிரத்து இருநூற்றி எழுபத்தி ஐந்து மட்டும்) & 13.11.2024 | 05-03-2025 சிம்பொலிக் |

பாதுகாப்பு சொத்துக்கள்/அசையா சொத்துக்கள் விவரம்: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மதுக்கரை சார் பதிவு மாவட்டம், மதுக்கரை தாலுகா, சீராபாளையம் கிராமம், பட்டா எண். 483, எஸ்.எப். எண். 294/2பி1 - ஏக்கர் 0.46 பின்பு எஸ்.எப்.எண். 301/2ஏ1ஏ1 - ஏக்கர் 0.93 பின்பு எஸ்.எப். எண். 301/2பி1 - ஏக்கர் 1.21 மற்றும் எஸ்.எப்.எண். 301/2பி3 - ஏக்கர் 0.95 மொத்தம் ஏக்கர் 3.55 பரப்பு நிலம் "செந்தூர் ஸ்டைட்" என்ற பெயரில் உள்ள குடியிருப்பு லேஅவுட்டாக மாற்றப்பட்டது, ஒப்புதல் வழங்கியது குறிச்சி பட்டு நகர் டெவலப்மெண்ட் அத்தாரிட்டி, ஒப்புதல் Ma.Va/Ku.Pu.Na.D.A.No.13/2021 சைட் எண்.39 தெற்கு பக்கம் பகுதி மற்றும் பின்வரும் எல்லைகள் மற்றும் அளவுகள் : வடக்கு - 7.2 மீட்டர் அகல கிழக்கு மேற்கு லேஅவுட் சாலை, தெற்கு - சைட் எண். 39 வடக்கு பக்கம் பகுதி, மேற்கு - சைட் எண்.40, கிழக்கு - எஸ்.எப்.எண்.302/1E நிலம். இதன் மத்திய : கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் : 33'0, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் - 14'0 குறுக்கு 5'9 + 15'0, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம் - 33'0, தெற்கு வடக்காக மேற்கு பக்கம் - 30'0. பரப்பளவு 1050 சதுர அடி அல்லது 2 சென்ட்ஸ் மற்றும் 179 சதுர அடி பரப்பு நிலம் மற்றும் சாலைகள் உபயோக உரிமைகள் மற்றும் பொது பாதை இதர. மேற்குறிப்பிட்ட சொத்தானது தற்போது துணைபிரிவு எஸ்.எப்.எண். 301/2ஏ1ஏ-க்குப்பட்டது. மேற்குறிப்பிட்ட சொத்து சீராபாளையம் பஞ்சாயத்து எல்லைகளில் அமைந்துள்ளது.

இடம் : கோயம்புத்தூர், தமிழ்நாடு Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
நாள் : 07.03.2025 டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்-க்காக

தமிழ்நாடு அரசு
கூடலூர் நகராட்சி, நீலகிரி மாவட்டம்
ந.க.எண்: 779/ 2020/அ1 நாள்: 04.03.2025
2025 முதல் 2028 வரை உள்ள மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் மற்றும் சுங்கம் அல்லது கட்டணம் வசூல் செய்யும் உரிமைகள்

பொது ஏலம் மற்றும் ஒப்பந்தம் அறிவிப்பு

(அரசாணை(நிலை) எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4) துறை நாள். 19.09.2008)
(இந்நகர்மன்றத்தின் 03.03.2025 தேதிய எண். 713 தீர்மானத்தில் அங்கீகாரம் அளிக்கப்பட்டது)

கூடலூர் நகராட்சிக்கு பாத்தியமான பட்டியலில் கண்டுள்ள இனங்களின் கட்டணம் வசூல் செய்து பராமரிக்கும் உரிமைக்கு, நகராட்சி ஆணையர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவராவ் நாள் 20.03.2025 வியாழக்கிழமை காலை 12.00 மணிக்கு பகிரங்க ஏலம் நடைபெறும்.
ஏலத்தில் கலந்து கொள்பவர்கள். வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலையை ஆணையர் கூடலூர் நகராட்சி என பெற்று ஏல தினத்திற்கு முதல் நாள் 19.03.2025 மாலை 05.00 மணிக்குள் நகராட்சியில் செலுத்தி அத்தாட்சி பெற்றுக் கொள்ள வேண்டும்.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசு ஆணை எண்.181 நாள் 19.04.2008 ன் படி உரிமகாலம் மூன்று ஆண்டு காலத்திற்கு உரிமம் விடப்படும். ஆரம்ப ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகையில், இரண்டாம் ஆண்டில் 5% குத்தகை உயர்வும், மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டுடன் தொகையில் 5% குத்தகை உயர்வு செய்யப்படும்.
உரிம காலம் 3 ஆண்டுகள் ஏலம் / டெண்டர் கேள்விப் பட்டியலில் உள்ளபடி கோர வேண்டும். மூன்று ஆண்டு கால அளவு ஒரு தொகுப்பு கால அளவிற்குள் கட்டணம் வசூலிக்கும் உரிமம் பெற்ற குத்தகைதாரர் காலமாகி விட்டால், அவர்களின் வாரிசுதாரர்கள் குத்தகைதாரர்களாக அவ்வுரிமத்தைப் பெறலாம். வாரிசுதாரர் விருப்பம் இல்லையெனில் உரிமம் மறு ஏலம் விடப்படும் / உரிமம் பெற்றவர்கள் மத்திய கலால் மற்றும் சுங்க வரி, சேவை வரி துறையினருக்கு செலுத்த வேண்டிய சரக்கு மற்றும் சேவை வரி, வருமான வரி மற்றும் தொழில் வரி செலுத்த கடமைப்பட்டவர்கள் ஆவர்.
ஏலம் உறுதி செய்த பின்பு 12 மாத உரிமத் தொகையுடன் GST 18% சேர்த்து செலுத்த வேண்டும். உரிமைத் தொகை மற்றும் ஒப்பந்தப் பத்திரம் செலுத்திய பின்பே பணி உத்திரவு வழங்கப்படும்.
2024-2025 ஆம் ஆண்டுகளுக்கான உரிமம் மற்றும் கட்டணம் வசூல் செய்துக் கொள்ளும் இனங்கள்

வ. எண்	உரிமங்களின் பெயர்	உரிமத்திற்கு செலுத்த வேண்டிய முன்வைப்புத் தொகை	ஏலம் உறுதியான பின் செலுத்த வேண்டிய ஏல முன்வைப்புத் தொகை	வருமானவரி சட்டத்தின் படி செலுத்த வேண்டிய (வருமானவரி / GST)
1	காந்தி சிலை அருகில் உள்ள திடலில் இரு சக்கர வாகனங்களுக்கு சுங்க கட்டணம் வசூல் செய்யும் உரிமை	50000	உரிமத் தொகை முழுவதும்	18% GST
2	உழவர் சந்தையில் அமைந்துள்ள கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமை	50000	உரிமத் தொகை முழுவதும்	18% GST
3	BSNL அலுவலகம் முன்புறம் அமைந்துள்ள கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமை	50000	உரிமத் தொகை முழுவதும்	18% GST
4	பாரத மாநில வங்கியில் அமைந்துள்ள கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமை	50000	உரிமத் தொகை முழுவதும்	18% GST
5	ஆடு மாடு வதை செய்யும் அறுவைக் கூடம்	100000	உரிமத் தொகை முழுவதும்	18% GST
6	காய்கறி சந்தையில் அமைந்துள்ள கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமை	50000	உரிமத் தொகை முழுவதும்	18% GST

வெ.ஆ.எண். 179 / செ.ம.தொ.அ / ஒப்பந்தப்புள்ளி 2025 / நீலகிரி மாவட்டம் ஆணையாளர், கூடலூர் நகராட்சி

UJJIVAN SMALL FINANCE BANK
பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.4/128, தரைத்தளம், சுதந்திரபுரம், சிக்கடசாமிபாளையம் கிராமம், மேட்டுப்பாளையம், தமிழ்நாடு-641301

இ-ஏல விற்பனை அறிவிப்பு
கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள்2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.
SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்தினை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்/ அடமானதாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை (ரூபாயில்)	டேவணித்தொகை (EMD) (ரூபாயில்)
1188210050000001 1.Mrs.சத்தியவாணி 2.Mr.முத்துகுமார்	(i) 23.07.2021 & 22.07.2021 அன்றுள்